# "முருகன் பாமாலை"



சைவத்திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி அவர்களின்
நூறாவது அகவை நிறைவை முன்னிட்டு
வெளியிடப்பட்டது

**யாமாவளவு**
**தெல்லிப்பழை**
**23.09.2009**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சைவத்திரு.திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி

**23.09.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை,
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
தெல்லிப்பழை இந்துசமய விருத்திச் சங்கம்,
தெல்லிப்பழை மத்திய ஐக்கிய நாணய சங்கம்,
தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

ஆகியவற்றின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவிலின் திருத்தொண்டர் திருவகுப்பின் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரேயொரு முதுதொண்டனாக விளங்கும்

## சைவத்திரு.திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
## அவர்களின்

## நூறாவது அகவை நிறைவைக் குறித்து

# முருகன் பாமாலை

## என்னும் நூல் வெளியிடப்படுகின்றது

திருசிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
யாமாவளவு
தெல்லிப்பழை

**23.09.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறாண்டு அகவையை பூர்த்தி செய்த பெருமகனைப் பற்றி

எம் தந்தையாரின் நூறாவது அகவை நிறைவு நாளில் "முருகன் பாமாலை" எனும் தோத்திரத் தொகுதியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். 1999ம் ஆண்டு அன்னாரின் 90 வது அகவை நிறைவு நாளில் "திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்" என்ற தோத்திரத் தொகுதியை வெளியிட்டு மன நிறைவு அடைந்தோம். 1994 ம் ஆண்டு 85 வது பிறந்தின விழாவும் "திருமண வைபவ விழா" வும் என அன்னரின் திருமணமாகி அறுபது ஆண்டு நிறைவை நிறைவாகக் கொண்டாடி மகிழ்ந்தோம். 1989 ம் ஆண்டு 80 வது பிறந்ததின விழாவை உற்றார், உறவினரிடம் சேர்ந்து மகிழ்வாக கொண்டாடினோம். 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் 23ம் திகதிக்கு முன்பாகவே புரட்டாதி உத்தராட பிறந்திதினம் வந்ததால் காலையில் வீட்டில் சிவபூஜை செய்வித்தும் காசிப்பிள்ளையார், குருநாதசுவாமி, துர்க்கையம்மன் கோயில்களில் அர்ச்சனை செய்வித்தும்,மாலையில் மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களையும் உறவினரையும் அழைத்து சிற்றுண்டி பரிமாறி மகிழ்ந்தோம். எம் பெற்றோர் 73 வருடங்கள் இல்லறம் நடத்திய பின் 2007 இல் எமது தாயார் சிவபதம் அடைந்து விட்டார்.

எமது தந்தையார் ஆறுமுகம் திருச்சிற்றம்பலம், சிதம்பரவல்லி தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாகப் 1909 ம்ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ம் திகதி தமிழுக்கு புரட்டாதி உத்தராட நட்சத்திரத்தில் பிறந்தார். தாய் வழிப்பேரன் நல்லப்பா என அவர்களால் அழைக்கப்பட்ட அமரர் காசிநாதர் பொன்னம்பலம் அவர்கள் குழந்தையாக இருக்கும் பொழுதே பேரனை மடியில் இருத்தி தேவராம் ஓதப் பழக்கினார். பேரன் நல்லப்பா (பொன்னம்பலம்) அவர்களும் அவர்களுடைய உடன் பிறந்தார்களான தங்கப்பிள்ளை, குட்டிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை ஆகியோர் தமக்குரிய "நல்லான் சீமா" காணியில் சைவாகம முறைப்படி முருகன் ஆலயம் அமைக்க முற்பட்ட காலம் முதல் பெற்றோர் காலத்தில் ஆலயம் கட்டி முடிக்கப் பெற்று கும்பாபிடேகம் நடைபெற்ற பொழுதும் ஆலய வழிபாட்டிலும், தொண்டிலும் பெற்றோரால் வழிப்படுத்தப்பட்டார். தம் பெற்றோரையும் குலதெய்வம் முருகனையும் என்றும் நெஞ்சில் நிலைநிறுத்தி போற்றி வழிபட்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியசாலையில் அதன் நிறுவுநர் அமரர் பிரம்மஸ்ரீ.க.சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களிடம் ஆரம்பக்கல்வியைப் பயிலும் வாய்ப்பினைப் பெற்றார். அவர் வீட்டில் மெழுகிய மண் திண்ணையில் இருந்து படித்ததை இன்றும் நினைவு கூறுவர். இவற்றினால் தான் போலும் எம் பெற்றோர் வாழ்நாள் முழுவதும் அந்தணர்களையும், சிவாச்சாரியார்களையும் போற்றி அவர்களை மிகவும் மதித்து மரியாதை செய்து அவர்களுக்கு அனுசரணையாகவே வாழ்ந்தார்கள்.

இடைநிலைக்கல்வியை மகாஜனாக் கல்லூரியில் அதன் நிறுவுநர் தெ.து துரையப்பாபிள்ளை அவர்களிடம் பயிலும் பேற்றைப் பெற்றார். பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்த பொழுது அமரர் றூப் (W.A.TROUP) அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். நிருவாகத் திறமை மிக்கவர்களிடம் இளமையிலே பயிலும் வாய்ப்பைப் பெற்றதால் எதனையும் ஒழுங்காகவும் கனகச்சிதமாகவும் செய்து முடிக்கும் ஆற்றல் எம் தந்தையாரிடம் இயல்பாகவே அமைந்தது.

ஆசிரிய தராதரப்பத்திரத்துடன் தான் ஆரம்பக் கல்வி பயின்ற சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக கடமை புரியத் தொடங்கி 22 வருடங்கள் அங்கு கடமையாற்றினார். வகுப்பறைக் கற்பித்தலுடன் புற வேலைகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டார். மாணவர்களுக்குச் சிக்கன வாழ்வும் சேமிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்த அரசாங்க சேமிப்புச் சபையாரிடம் சேமிப்புச் சான்றிதழ்களைப் பெற்று, வெற்றிச் சின்னங்களையும், பாராட்டுக்களையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து, பாடசாலைக்கும் புகழ் சேர்த்தார். நால்வர் குருபூசை, நவராத்திரி வழிபாடு, மற்றும் பாடசாலை நிகழ்வுகள் என்பவற்றையும் பாடசாலையின் பொன்விழாக் காலத்தில் 'பொன்விழா மலரின்' பத்திராதிபர் குழுவில் முதல்வராகச் செயற்பட்டு பொன்விழா மலரையும் சிறப்பாக வெளியிட்டார்.

மகாஜனாக் கல்லூரியில் (1952 - 1969) 17 ஆண்டுகள் அமரர் தெ.து.ஐயரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியப் பணி புரிந்தார். மகாஜனாக் கல்லூரி பொன்விழாக் காலங்களில் முற்ற வெளியில் களியாட்ட விழாவின் போதும், பின்னர் கல்லூரியில் பொருட்காட்சி நடைபெற்ற போதும், மற்றும் அங்கு நடைபெற்ற சகல நிகழ்ச்சிகளுக்கும் பூரண ஒத்துழைப்பு நல்கினார். பாடசாலையில் சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் கோயில் அமைப்பதற்கு அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமராசாமிக்குருக்களிடம் சென்று ஆலோசனை பெறுவதற்கு எம் தந்தையாரையும் அழைத்துச் சென்றனர். வருடந்தோறும் நடைபெறும் வருடாந்த புள்ளி விபரத்திரட்டுப் பணியில் அதிபருக்குப் பெரிதும் உதவியாக இருந்து வந்தார்.

தந்தை வழிப் பேரன் வன்னித்தம்பி ஆறுமுகம் அவர்கள் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வீதியில் கீரிமலைக்குச் செல்லும் வீதியருகே பூவரசு மரத்தடியில் ,மகோற்சவ காலங்களில் தண்ணீர் பந்தல் அமைத்து அடியார்களுக்கு உதவி புரிந்தார் . பேரனுக்குப்பின் தந்தையாரும், தந்தைக்குப் பின் தமையனாரும், பின்னர் மருமக்களும் பொறுப்பேற்று நடாத்தி வந்த பொழுது தண்ணீர் பந்தல் பணிகளை விடாது நடாத்தி வந்தார்.

ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் சமூகத்துடன் தொடர்புடைய பல செயற்பாடுகளிலும் இயல்பாகவே ஈடுபட்டுள்ளார். தெல்லிப்பழை மத்திய ஐக்கிய நாணய சங்கம், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பழை இந்து சமய விருத்திச் சங்கம், தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கம் ஆகியவை ஆரம்பித்த பொழுது ஆரம்பக் கர்த்தாக்களில் ஒருவராக இருந்து தொடர்ந்து சேவையாற்றி வந்துள்ளார். கௌரவ செயலாளர், பொருளாளராக பதவி வகித்து, இச் சங்கங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்துள்ளார். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் செயலாளராக இருந்த காலத்தில் "பாடு பரவு பணிசெய்" என்ற மகுடவாக்கியத்தை அமைத்துக் கொடுத்து, இளைஞர்களையும் ஆலயத் தொண்டில் வழிப்படுத்தினார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது யுத்த விமானத் தாக்குதலில் இருந்து மக்களைக் காப்பாற்றும் உத்தியோகத்தராகவும் (A.R.P.warden Air Raid Prevention warden) கடமையாற்றியுள்ளார். நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுவதற்கு உதவியாளராக (JURY SERVICE) அழைப்பு வந்த காலங்களில் பணியாற்றியுள்ளார். எலிசபெத் மகாராணியார் இலங்கைக்கு விஜயம் செய்த பொழுது இப்பகுதி மக்கள் சார்பாக கொழும்பு சென்று மகாராணியைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் கிடைக்கப் பெற்றார்.

புலிமுகச்சிலந்தி, தேள், கொடுக்கன் போன்ற விஷ ஜந்துக்களால் பாதிக்கப்பட்வர்களுக்கு கை வைத்திய முறைச் சிகிச்சையையும் இலவசமாக அளித்து வந்துள்ளார். பயனுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களையும் பயிர்களையும் நட்டுப் பராமரித்து வீட்டுத் தோட்டமும் செய்து வந்தார். பசுமாடு, பால் ஆடுகளையும் வளர்த்துப் பராமரித்து வந்தார்.

இளைஞராக இருந்த காலத்திலேயே (1932ம் ஆண்டளவில்) குருநாதசுவாமி கோயிலில் கந்தபுராணப் படிப்பில் பங்கு பற்றி வந்துள்ளார். அதனை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செய்து வந்துள்ளார். இதே காலத்தில் பன்னிரு திருமுறை முற்றோதலிலும் அக் கோயிலில் பங்கு பற்றினார். 1960 ம் ஆண்டில் மகாஜனாக் கல்லூரியில் ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களை ஆசிரியராக் கொண்டு "பெரியபுராணம்" வகுப்பு ஒன்றை ஆரம்பித்ததுடன் தானும் அதில் பங்கு பற்றினார். கந்தபுராணம், பெரிபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகிய மூன்றும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் படிக்கத் தொடங்கிய காலத்தில் அதற்குப் பொறுப்பாக இருந்து நெறிப்படுத்தினார். மார்கழி மாதத்தில் தவறாது திருவாதவூரர் அடிகள் புராணம் படிப்பார். தம் வாழ்க்கைக் காலத்தில் திருமுறை ஓதலும், புராணப் படிப்பும் இரு கண்களாகப் போற்றி வந்துள்ளார்.

தன் குலதெய்வமான குருநாதசுவாமி கோயிலின் திருத்தொண்டர் திருவகுப்பின் முதுதொண்டனாக வாழ்ந்து வருகின்றார். வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனையுடன் திருவீதியுலா வரும் வள்ளி, தெய்வானை சமேத கந்தசாமியார் விக்கிரகம் இடப்பெயர்ப்பின் போது காணாமல் போனதால் 2003 ம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் போது சண்முகப் பெருமான், கந்தசுவாமியார் திருவுருவங்களைப் புதிதாகச் செய்து கொடுத்தார். மேலும் குதிரை வாகனம், மயில் வாகனம் ஆகியவற்றை செய்து கொடுத்தார். தன் தந்தையாரின் பின் 60 வருட காலமாக சிறப்பாகச் செய்து வந்த வைகாசி விசாகப் பொங்கலை மகனிடம் கையளித்துள்ளார். மேலும் தான் வழிபட்ட கோயில்களான குருநாதசுவாமி, காசிப்பிள்ளையார், துர்க்கை அம்மன், மாவிட்டபுரம் கந்தசுவாமி, கீரிமலை சிவன் கோயில் ஆகியவற்றில் தன் உபயமாக சங்காபிஷேகம் செய்து சிறப்பான பூசை வழிபாடு செய்து அருள் பெற்றவர். வாழ்வில் பல கும்பாபிடேகங்களைக் தரிசித்து ஆத்மபலம் பெற்றவர். தன் மகள் இந்தியாவில் கல்வி கற்றபோது, அங்கு சென்று சிதம்பரம் நடராஜர் கோயிலை தரிசித்ததுடன் அங்கு பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு ஆத்மதிருப்தி அடைந்தவர். அத்துடன் திருப்தி அடையாது தன் மனைவியான எம் அம்மாவையும் தலயாத்திரை செய்து வர இந்தியா அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய பழி, பாவங்களுக்கு அஞ்சி அறநெறியில் இல் வாழ்க்கை இயல்பாகவே அமையப் பெற்ற எம் தந்தையார் வாழ்க்கையில் பெறும் பேறுகள் அனைத்தும் பெற்று திருப்தியடைந்துள்ளார்.

மங்கலம் என்ப மனையாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

என்பதிற்கேற்ற எம் அம்மா தையல்நாயகி அம்மையார் நல்ல வாழ்க்கைத் துணையாக வாய்க்கப் பெற்று தலைமகனாக வெற்றி வேலாயுதத்தைப் பெற்றெடுத்தார். அடுத்து அம்பிகாதேவி, சயதேவி, கலாதேவி, சகுந்தலாதேவி, லோகபாலினி ஆகிய ஐந்து பெண்களையும் பெற்று தகுந்த கல்வியைக் கொடுத்து வளர்த்து திருமணம் செய்து கொடுத்து சம்பந்திமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைக் கண்டு மகிழ்ந்தவர். நூற்றாண்டு விழாக்காணும் எம் தந்தையார் பழனியப்பன், குருநாதசுவாமி திருவருளால் நீடு வாழ்ந்து எம்மை எல்லாம் ஆசீர்வதிக்குமாறு வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர் சார்பாக**
**திருமதி.கலாதேவி பொன்னம்பலம்**
அவர்கள் எழுதியது

**யாமாவளவு**
**தெல்லிப்பழை**
**18.09.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# நக்கீரதேவ நாயனார் அருளிய

# திருமுருகாற்றுப்படை



## க.திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டு ஆஅங்கு
ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதன் உடைநோன் தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை

மறு இல் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமம் சூல் மா மழை
வாள் போழ் விசும்பின் வள் உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து
இருள் படப் பொதுளிய பராரை மரா அத்து

உருள் பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவை இய ஒண் செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர் தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூ இதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்
மகாப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்

துவா முடித்த துகள் அறும் உச்சிப்
பெருந் தண் சண்பகம் செரீஇக் கரும் தகட்டு
உள் ஐப் பூ மருதின் ஒள் இணர் அட்டிக்
கிளைக் கவின்று எழுதரு கீழ் நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்பத் திண் காழ்
நறும் குறடு உரிஞ்சிய பூம் கேழ்த் தேய்வை
தேம் கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண் தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெரியாக்
கோழி ஓங்கிய வென்று அடு விறற் கொடி
வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்
சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூர் அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மான் பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள்
பெருந் தண் கண்ணிமிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க உள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல்
உலறிய கதுப்பின்பிறழ் பல் பேழ் வாய்ச்
சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர் மோட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகெழு செலவின் அஞ்சு வரு பேய்மகள்
குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல்
கண் தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்று அடு விறல் களம் பாடித் தோள் பெயரா

நிணம் தின் வாயள் துணங்கை தூங்க
இரு பேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல் வலம் அடங்கக் கவிழ் இணர்
மாமுதல் தடிந்த மறு இல் கொற்றத்து

எய்யா நல் இசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன் இசை வாய்ப்ப

இன்னே பெறுதி நீ முன்னிய வினையே
செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்
திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து

மாடம் மலி மறுகில் கூடற் குடவயின்
இரும் சேற்று அகல் வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள் தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண் போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம் சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் அதா அன்று

## உ. திருச்சீரலைவாய்

வைந் துதி பொருத வடு ஆழ் வரி நுதல்
வாடா மாலை ஓடையொடு துயல் வரப்
படும் மணி இரட்டும் மருங்கின் கடு நடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றத்து அன்ன மாற்றரும் மொய்ம்பின்
கால் கிளர்ந்து அன்ன வேழம்மேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திரு மணி
மின் உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப

நகை தாழ்வு துயல் வருஉம் வகை அமை பொலம்குழை
சேண் விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவு இல் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள் நிற முகனே

மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம் உற நாடித்
திங்கள், போலத் திசை விளக்கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச்செல் சமம் முறுக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே, ஒருமுகம்

குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவால் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே,
ஆங்குஅம், மூவிரு முகனும், முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ப்பில் சுடர் விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர் தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை,
உக்கம் சேர்த்தியது ஒருகை,
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருகை ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப,
ஒருகை மார்பொடு விளங்க, ஒருகை தாரொடு பொலிய,
ஒருகை கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப,
ஒருகை பாடு இன் படுமணி இரட்ட,
ஒருகை நீல் நிற விசும்பின் மலி துளி பொழிய,

ஒருகை வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கு அப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால் வளை ஞால
உரம் தலைக் கொண்ட உரும் இடி முரச மொடு

பல்பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஒங்கு உயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதா அன்று

## ௩.திருவாவினன்குடி

சீரை தை இய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வால் நரை முடியினர்,
மாசு அற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தை இய ஊன்கெடு மார்பின்

என்பு எழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்
பல உடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு

கடும் சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மே வரத்
துனிஇல் காட்சி முனிவர் முற் புகப்
புகை முகந்து அன்ன மாசுஇல் தூ உடை
முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவி நேர்பு வைத்த செய்வு உறு திவவின்
நல் யாழ் நவின்ற நயன் உடை நெஞ்சின்
மெல் மொழி மேவலர் இன் நரம்பு உளர
நோய் இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர் தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்

பொன் உரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்து எந்து அல்குல்
மாசுஇல் மகளிரொடு மறு இன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிற்று
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந் திறல்

பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள் அணி நீள்கொடிச் செல்வனும், வெள்ஏறு
வலவயின் உயரிய பலர் புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூ எயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்,

நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து நூறு பல்
வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து
ஈர் இரண்டு ஏந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்,

நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கைப்
பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறும் ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவுஇல் ஊழி

நான் முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன் பூத்து அன்ன தோன்றலர், மீன்சேர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளி கிளர்ந்து அன்ன செலவினர், வளிஇடைத்
தீ எழுந்து அன்ன திறலினர், தீப்பட
உரும் இடித்து அன்ன குரலினர், விழுமிய
உறுகுறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்து உடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சில் நாள்
ஆவினன் குடி அசைதலும் உரியன் அதாஅன்று

## ச.திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழா அது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறு நான்கு இரட்டி இளமை நல்லி யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன் நவில் கொள்கை
மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து

இரு பிறப்பாளர் பொழுது அறிந்து நுவல்
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி

நா இயல் மருங்கில் நவிலப் பாடி
விரை உறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதாஅன்று

## ரு.குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு, வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக், குளவியொடு

வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்,
நறும்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்,
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டகச் சிறுபறைக் குரவை அயர,
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி,
இணைத்த கோதை அணைத்த கூந்தல்,
முடித்த குல்லை இலை உடை நறும்பூச்,

செங்கால் மரா அத்த வால்இணர் இடைஇடுபு,
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ,
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன், சிவந்த ஆடையன், செவ்வரைச்

செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்,
குழலன், கோட்டன், குறும்பல் இயத்தன்,
தகரன், மஞ்ஞையன், புகர்இல் சேவல் அம்
கொடியன், நெடியன், தொடி அணி தோளன்

நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறும் தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து,
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே அதா அன்று,

## சா. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ, மறி அறுத்து,
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ,
ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,

வேலன் தை இய வெறிஅயர் களனும்,
காடும், காவும், கவின்பெறு துருத்தியும்,
யாறும், குளனும், வேறு பல் வைப்பும்,
சதுக்கமும், சந்தியும், புதுப்பூங் கடம்பும்,
மன்றமும், பொதியிலும், கந்து உடை நிலையினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டலைக் கொடியொடும் மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து,
குடந்தம் பட்டுக், கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்,
செந்நூல் யாத்து, வெண்பொரி சிதறி,

மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூ வெள் அரிசி
சில்பலிச் செய்து, பல்பிரப்பு இரீஇச்,
சிறுபசு மஞ்சளொடு நறு விரை தெளித்துப்,
பெரும்தண் கணவீரம் நறுந்தண் மாலை

துணை அற அறுத்துத், தூங்க நாற்றி,
நளி மலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி,
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி,
இமிழ்இசை அருவியோடு இன்இயம் கறங்க,
உருவப் பல்பூத் தூஉய், வெருவரக்

குருதிச் செந்தினை பரப்பிக், குறமகள்
முருகியம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகு ஆற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்,
ஆடுகளம் சிலம்பப் பாடிப், பல உடன்
கோடு வாய் வைத்துக், கொடு மணி இயக்கி,

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட,
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த வாறே,
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக், காண் தக
முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்,

கைதொழூஉப் பரவிக், காலுற வணங்கி,
நெடும் பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை,
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ

செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து

விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையினர்க்கு ஆர்த்தும் இசை பேராள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்

மண்டு அமர் கடந்தநின் வென்று ஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல

யான்அறி அளவையின் ஏத்தி, ஆனாது,
நின் அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்,
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் எனக்
குறித்தது மொழியா அளவையில், குறித்துடன்

வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறு அயர் களத்து வீறுபெறத் தோன்றி,
அளியன் தானே, முதுவாய் இரவலன்,
வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்து என
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி,
அணங்குசால் உயர்நிலை தழீஇப், பண்டைத்தன்,
மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி,
அஞ்சல் ஓம்புமதி, அறிவல்நின் வரவு என

அன்புடை நன்மொழி அளைஇ, விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற, விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்கும்மதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து,

ஆரம் முழுமுதல் உருட்டி, வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு,
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய, நன்பல
ஆசினி முதுசுளை கலாவ, மீமிசை

நாக நறுமலர் உதிர, யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப், பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப், பெருங்களிற்று
முத்து உடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா,

வாழை முழுமுதல் துமியத், தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்,
கறிக்கொடிக் கருந்துணர் சாயப், பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்,
கோழி வயப்பெடை இரியக், கேழலோடு

இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குருஉயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர் அளைச் செறியக், கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச், சேண் நின்று
இழும் என இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழவோனே

திருமுருகாற்றுப்படை முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனி வெண்பாக்கள்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன் தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என் உள்ளத்து உறை. 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கல்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள், திருக்கைவேல், - வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல், உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர் தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டு உருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும் 4

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த(்)து அருளும்
வேலப்பா செந்தி வாழ்வே!. 5

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன் 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! - பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடம்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றின் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப் படையைப்
பூசையாக் கொண்ட புகல். 9

நக்கீரர் தாம்உரைத்த நன் முருகாற்றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும். 10

## கந்தபுராணம்

தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத்
தொல் கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ
வரம்பிலா உயிர் பெற்றுய்ந்தான்.

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சாவ ணத்தில்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளினானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய
## கந்தர் அனுபூதி

நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

'ஆடும் பரி, வேல், அணிசேவல்,' எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்!
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே. 1

உல்லாச, நிராகுல, யோக, இதச்,
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா! சுரபூ பதியே! 2

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே! 3

வளைபட்ட கை மாதொடு, மக்கள் எனும்,
தளைபட்டு, அழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட்டு எழு, சூர் உரமும், கிரியும்,
தொளைபட்டு உருவத், தொடு வேலவனே? 4

மக மாயை களைந்திட வல்ல பிரான்,
முகம் ஆறும் மொழிந்தும், ஒழிந்திலனே!
அகம், ஆடை, மடந்தையர், என்று அயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணியான மநோ சிலை மீது, உனதாள்
அணியார் அரவிந்தம், அரும்பு மதோ?
'பணியா?', என வள்ளி பதம் பணியும்,
தணியா அதிமோக! தயா பரனே! 6

கெடுவாய் மனனே! கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே. 7

அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும், இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா!
குமரன் கிரி ராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே! 8

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டு ஊடு அற, வேல் சைலத்து எறியும்
நிட்டூர, நிராகுல, நிர்ப்பயனே! 9

கார் மா மிசை காலன் வரின், கலபத்து
ஏர்மாவிசை வந்து, எதிரப்படுவாய்!
தார் மார்ப! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே! 10

'கூ கா' என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே! 11

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
'சும்மா இரு சொல் அற' என்றலுமே,
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகன், தனிவேல் முனி, நம் குரு' என்று,
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ!
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்.
ஐவாய் வழி செல்லும் அவாவினையே. 14

'முருகன், குமரன், குகன்' என்று மொழிந்து,
உருகும் செயல் தந்து உணர்(வு) என்(று) அருள்வாய்?
பொரு புங்கவரும், புவியும், பரவும்
குருபுங்கவ! எண் குண பஞ்சரனே! 15

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு,
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் பட வேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே! 16

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்,
தாமே பெற, வேலவர் தந்ததனால்,
பூமேல் மயல்போய், அறம் மெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே. 17

உதியா, மரியா, உணரா, மறவா,
விதிமால் அறியா, விமலன் புதல்வா!
அதிகா! அநகா! அபயா! அமரா
வதி காவல! சூர பயங்கரனே! 18

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா!
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே!
மிடி என்று ஒரு பாவி வெளிப் படினே. 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா!
விரிதாரண! விக்ரம வேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே! 20

கருதா மறவா நெறிகாண, எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா! முருகா! மயில் வாகனனே!
விரதா! சுர சூர விபாடணனே! 21

காளைக் குமரேசன் எனக் கருதித்,
தாளைப் பணியத் தவம் எய்தியவா!
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச், சுர பூபதி, மேருவையே! 22

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ! முறையோ!
வடி விக்ரம வேல் மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே! 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ!
சூர் வேரொடு குன்று தொளைத்த, நெடும்
போர் வேல்! புரந்தர பூபதியே! 24

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அழலோ, கழலோ, முழுதும்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! 25

ஆதாரம் இலேன், அருளைப் பெறவே,
நீ தான் ஒரு சற்றும் நினைந்திலையே!
வேதாகம ஞான வினோத! மன
அதீதா! சுரலோக சிகாமணியே! 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே! விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயில் ஏறிய வானவனே! 27

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது, தற்பரமே. 28

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ,
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே,
மல்லே புரி பன்னிரு வாகுவில், என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே! 29

செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று
ஒவ்வாதது என உணர்வித்தது தான்,
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்,
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே? 30

'பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய்' என, என்னை விதித்தனையே!
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே! 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே! மலைகூறிடு வாகையனே. 32

சிந்தாகுல இல்லொடு, செல்வம் எனும்
விந்தாடவி, என்று விடப் பெறுவேன்?
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே! 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல், எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகா வல! சண்முகனே!
கங்கா நதி பால! கிருபாகரனே! 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்,
கதிகாண, மலர்க் கழல் என்று அருள்வாய்?
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது, பின்
துதியா விரதா! சுர பூபதியே! 35

'நாதா! குமரா! நம!' என்று அரனார்
'ஓதாய்' என, ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே! 36

'கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம்' எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய், அடியோடும் அகந்தையையே. 37

ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத்
தீது ஆளியை, ஆண்டது செப்புமதோ!
கூதாள கிராத குலிக்கு இறைவா!
வேதாள கணம் புகழ் வேலவனே! 38

மாஏழ் சனனம் கெட, மாயைவிடா,
மூ ஏடணை என்று முடிந்திடுமோ!
கோவே! குறமின் கொடிதோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே! 39

வினை ஓட விடும் கதிர்வேல் மறவேன்,
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு திரிந்தவனே! 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாது எனையே சரணங்களிலே
கா கா, நமனார் கலகம் செய்யும் நாள்,
வாகா! முருகா! மயில் வாகனனே!
யோகா! சிவஞான உபதேசிகனே! 41

குறியைக், குறியாது குறித்து அறியும்
நெறியயைத், தனிவேளை நிகழ்த்திடலும்,
செறிவு அற்று, உலகோடு உரைசிந்தையும் அற்று,
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே. 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம் துகளாயின பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

சாடும் கனிவேல் முருகன் சரணம்,
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே. 44

கரவாகிய கல்வி உளார் கடைசென்
றிரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையே?
குரவா! குமரா! குலிசாயுத! குஞ்
சரவா! சிவயோக தயாபரனே? 45

எம்தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்க்கு எனையாள்,
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே! 46

ஆறு ஆறையும் நீத்து, அதன்மேல் நிலையைப்,
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா, உலகம் குளிர்வித்தவனே! 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிரிவு ஒன்று அற நின்ற பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய,
வெறி வென்றவரோடு உறும் வேலரனே? 48

தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே! 49

மதி கெட்டு, அறவாடி, மயங்கி, அறக்
கதி கெட்டு, அவமே கெடவோ கடவேன்?
நதி புத்திர! ஞான சுகாதிப! அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே! 50

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய்க் ஒளியாய்க்,
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்,
குருவாய் வரவாய் , அருள்வாய் குகனே! 51





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை

## குமரகுருபரர் சுவாமிகள் அருளிய
## கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளும், தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு

நாதமும், நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய், - ஆதிநடு

அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய், - வந்த

குறியும் குணமுமொரு கோலமும் அற்று, எங்கும்
செறியும் பரம சிவமாய், - அறிவுக்கு

அனாதியாய், ஐந்தொழிற்கும் அப்புறமாய், அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த் - தனாது அருளின்

பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய், - எஞ்சாத

பூரணமாய், நித்தமாய்ப், போக்குவரவும், புணர்வும்
காரணமும், இல்லாக் கதியாகிக்,- தாரணியில்

இந்திர சாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும்
தந்திரத்தில் சாராது, சார்வது போல் - முந்தும்

கருவின்றி நின்ற கருவாய், அருளே
உருவின்றி நின்ற உருவாய்த், - திரிகரணம்

ஆகவரும் இச்சை, அறிவு, இயற்றலால், இலய
போக அதிகாரப் பொருளாகி, - ஏகத்து

உருவும், அருவும், உருஅருவு மாகிப்,
பருவ வடிவம் பலவாய், - இருள் மலத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்கு, மல
பாகம் உறவே, கடைக்கண் பாலித்துத், - தேகமுறத்

தந்த அருஉருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்தம் உறவே பிணிப்பித்து, - மந்த்ரமுதல்

ஆறு அத்துவாவும், அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும், முற்
கூறத்தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து - மாறிவரும்

ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனியென்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் - தீர்வரிய

கன்மத்துக்கு ஈடாய்க், கறங்கும் சகடமும்போல்
சென்மித்து உழலத் திரோதித்து - வெம்நிரய

சொர்க்காதி போகம்எலாம் துய்ப்பித்துப், பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும், - தர்க்கமிடும்

தொன்னூல் பரசமயம் தோறும், அது அதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து, - முன்னூல்

விரதம் முதலாய பல மெய்த்தவத்தின், உண்மைச்
சரியை கிரியா, யோகம் சார்வித்து, - அருள்பெருகு

சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து,
ஆலோகம் தன்னை அகற்றுவித்து - நால்வகையாம்

சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப், - பெத்த

மலபரி பாகம் வருமளவில், பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி, - உலவாது

அறிவுக்கு அறிவாகி, அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் - பிரியாக்

கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்,
குருபரனென்று ஓர் திருப்பேர்கொண்டு - திருநோக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வினையைப் போக்கி, உடல் அறுபத்து எட்டு நிலம்
ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும் - பாழாக

ஆணவம் ஆன படலம் கிழித்து, அறிவில்
காணரிய மெஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும்

அடிஞானத்தால் பொருளும் ஆன்மாவும் காட்டிக்,
கடியார் புவனம் முற்றும் காட்டி - முடியாது

தேக்கு பரமானந்தத் தெள்ளமுதம் ஆகி, யெங்கும்
நீக்கம்அற நின்ற நிலைகாட்டிப் - போக்கும்

வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்து உலவா இன்பம் - மருவுவித்துக்,

கன்ம மலத்தார்க்கு மலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும், மானுமுடன் மால்விடைமேல் - மின்னிடத்துப்

பூத்த பவளப் பொருப்பொன்று, வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த

கருமமலக் கட்டறுத்துக், கண்ணருள் செய்து, உள்நின்று
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப் - பெருகியெழும்

மூன்று அவத்தையும் கழற்றி, முத்தருடனே யிருத்தி,
ஆன்ற பரமுத்தி யடைவித்துத் - தோன்றவரும்

யான் எனது என்று அற்ற இடமே திருவடியா,
மோன பரானந்தம் முடியாக - ஞானம்

திருவுருவா, இச்சை செயல் அறிவு கண்ணா,
அருளதுவே செங்கையலரா, - இருநிலமே

சந்நிதியா, நிற்குந் தனிச்சுடரே! யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே! - மின்னுருவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்ந்த நவரத்னச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும், - தேய்ந்தபிறைத்

துண்டம் இருமூன்று நிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும் - விண்ட

பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு,
அருள்பொழியும் கண்மலர் ஈராறும், பரிதி

பலவும் எழுந்து சுடர் பாலித்தாற் போலக்
குலவும் மகரக் குழையும், - நிலவுமிழும்

புன்முறுவல் பூத்து அலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்,
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் - வின்மலிதோள்

வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வர்உயிர் சிந்தும் திருமுகமும் - எவ்வுயிர்க்கும்

ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் - சூழ்வோர்

வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் - விடுத்து அகலாப்

பாச இருள் துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் - நேசமுடன்

போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் - தாகமுடன்

வந்து அடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் - கொந்து அவிழ்ந்த

வேரிக் கடம்பும், விரைக்குரவும், பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் - ஆரமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்க்கு உதவும் திருக்கரமும், சூர்மகளிர்
மேவக் குழைந்து அணைந்த மென்கரமும் - ஓவாது

மாரி பொழிந்த மலர்க்கரமும், பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் - மார்பகத்தில்

வைத்த கரதலமும், வாம மருங்கில் கரமும்,
உய்த்த குறங்கில் ஒருகரமும் - மொய்த்த

சிறுதுடிசேர் கையும், மணி சேர்ந்த தடம் கையும்,
கறுவுசமர் அங்குசம்சேர் கையும் - தெறுபோர்

அதிர் கேடகம் சுழற்றும் அம்கைத் தலமும்,
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் - முதிராத

கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டு அணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும், - பைம்பொன்

புரிநூலும், கண்டிகையும், பூம்பட்டு உடையும்,
அரைஞாணும், கச்சை அழகும் - திருஅரையும்,

நாதக் கழலும், நகுமணிப்பொன் கிண்கிணியும்
பாதத்து அணிந்த பரிபுரமும் - சோதி

இளம்பருதி நூறா யிரம்கோடி போல
வளம்தரு தெய்வீக வடிவும் - உளந்தனில் கண்டு,

ஆதரிப்போர்க்கு ஆருயிராய், அன்பர் அகத் தாமரையின்
மீது இருக்கும் தெய்வ விளக்கொளியே! - ஓதிய ஐந்து

ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே! - தாங்கரிய

மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்,
தொந்தம் உறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்த புவனத்து உருவே உரோமமாத்,
தத்துவங்களே சத்த தாதுவா - வைத்த

கலையே அவயவமாக்,காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமா நின்றோய், - பலகோடி

அண்டம் உருவாகி, அங்கம் சராசரமாய்க்,
கண்டசத்தி மூன்று உள்கரணமாய்த், - தொண்டுபடும்

ஆவிப் புலனுக்கு அறிவளிப்ப, ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எம் கோவே, - மேவ

வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே! மெய்ஞ்ஞானம்
தரும் அட்ட யோகத் தவமே! - பருவத்து

அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும், - சுகலளிதப்

பேரின்ப வெள்ளப் பெருக்காறு, மீதானம்
தேரின்பம் நல்கும் திருநாடும், - பாரின்பம்

எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும், - தொல்உலகில்

ஈறும் முதலும் அகன்று, எங்குநிறைந்து ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும், - ஏறுமதம்

தோய்ந்து களித்து, ஓர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும், - வாய்ந்தசிவ

பூரணத்துள் பூரணமாம், போதம் புதுமலராம்,
நாரகத்துள் கட்டும் நறுந்தொடையும், - காரணத்துள்

ஐந்தொழிலும் ஓவாது அளித்து உயர்ந்த வான்கொடியும்
வந்த நவநாத மணிமுரசும், - சந்ததமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கமின்றி ஆடி நிழல் அசைப்பான்போல், புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும், - தேக்கமழ்ந்து

வீசும் பனுவல், விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கம் எனப் பெற்றோனே! - தேசுதிகழ்

பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்கு உறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்கு ஒருநாள்

வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கு இரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும் - தந்து,

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப, - விரிபுவனம்

எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்,
பொங்கும் தழல்பிழம்பைப் பொன்கரத்தால் - அங்கண்

எடுத்தமைத்து, வாயுவைக் கொண்டு ஏகுதியென்று, எம்மான்
கொடுந்தளிப்ப மெல்லக் கொடுபோய், - அடுத்தது ஒரு

பூதத் தலைவ! கொடு போதியெனத், தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்று உய்ப்பத், - போது ஒருசற்று

அன்னவளும் கொண்டு அமைதற்கு ஆற்றாள், சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருவுருவாய் - முன்னர்

அறுமீன் மூலையுண்டு அழுது விளையாடி,
நறுநீர் முடிக்கு அணிந்த நாதன்! - குறுமுறுவல்

கன்னியொடும் சென்று, அவட்குக்காதல் உருக்காட்டுதலும்
அன்னவள் கண்டு, அவ்வுருவம் ஆறினையும் - தன்இரண்டு

கையால் எடுத்து அணைத்துக், கந்தன்எனப் போர்புனைந்து,
மெய்ஆறும் ஒன்றாக மேவுவித்துச் - செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் அணைத்து உச்சிமோந்து, முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச், - சகத்து அளந்த

வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து,
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே! - கிள்ளைமொழி

மங்கை சிலம்பின் மணிஒன்பதில் தோன்றும்,
துங்க மடவார் துயர்தீர்ந்து, - தங்கள்

விருப்பாள் அழித்த நவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு, - நெருப்பில் உதித்து

அங்கன் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண் கடா அதனைச்சென்று கொணர்ந்து - எங்கோன்

விடுக்குதி யென்று உய்ப்ப, அதன்மீது இவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா! - படைப்போன்

அகந்தை யுரைப்ப, மறை ஆதியெழுத்து ஒன்று
உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்,

சிட்டித் தொழில் அதனைச் செய்வது எங்ஙன் என்று, முனம்
குட்டிச் சிறையிருந்தும் கோமானே! - மட்டு அவிழும்

பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே, - கொல்நெடுவேல்

தாரகனும் மாயத், தடங்கிரியும் தூளாக,
வீரவடிவேல் விடுத்தோனே, - சீரலைவாய்த்

தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க், கருணை
வெள்ளம் எனத் தவிசின் வீற்றிருந்து, - வெள்ளைக்

கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக், கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்கு இமையோர் வாழச், - சயேந்திரனாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனைச் சோதித்து வருகு என்று, தடந்தோள் விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே! - கார்அவுணன்

வானவரைவிட்டு வணங்காமையால், கொடிய
தானவர்கள் நால்படையும் சங்கரித்துப், - பானு

பகைவன் முதலாய பாலருடன், சிங்க
முகனை வென்று வாகை முடித்தோய்! - சகம் உடுத்த

வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்த நெடும்
சூர்உடலம் கீண்ட சுடர்வேலோய்! - போர் அவுணன்

அங்கம் இருகூறாய், அடல்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்து எழுந்து தோன்றுதலும், அங்கு அவற்றுள்

சீரும் அரவைப் பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே! - மாறிவரு

சேவல் பகையைத் திறல்சேர் பாதகையென
மேவத் தனித்து உயர்த்த மேலோனே - மூவர்

குறைமுடித்து, விண்ணம் குடியேற்றித், தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்டு அளித்த தேவே, - மறை முடிவாம்

சைவக் கொழுந்தே, தவக்கடலே, வான்உதவும்
தெய்வக் களிற்றை மணஞ்செய்தோனே, - பொய்விரவு

காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாம மடமானின் வயிற்று உதித்துப், - பூமருவு

கானக் குறவர் களிகூரப், பூங்குயில்போல்
ஏனல் புனம்காத்து இனிதிருந்து, - மேன்மைபெறத்

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்து அளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே! - உள்ளம் உவந்து

ஆறு திருப்பதி கண்டு, ஆறு எழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே! - நாறுமலர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்திப் பொதும்பர் எழு கார் அலைக்கும் சீரலைவாய்ச்
செந்தில் பதிபுரக்கும் செவ்வேளே, - சந்ததமும்

பல்கோடி சன்மப் பகையும், அவமிருத்தும்,
பல்கோடி விக்கினமும், பல்பிணியும், - பல்கோடி

பாதகமும், செய்வினையும், பாம்பும், பிசாசும், அடல்
பூதமும், தீநீரும், பொருபடையும்,- தீது அகலா

வெவ்விடமும், துட்டமிருகம் முதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை யெதிர்த்தாலும்,- அவ்விடத்தில்

பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோளும்,
அச்சம் அகற்றும் அயில்வேலும்,- கச்சைத்

திருவரையும், சீறடியும், செங்கையும், ஈராறு
அருள்விழியும், மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்

சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓர் ஆறும்,
எந்தத் திசையும் எதிர்தோன்ற,- வந்து இடுக்கண்

எல்லாம் பொடிபடுத்தி, எவ்வரமும் தந்து புகுந்து,
உல்லாசமாக உளத்து இருந்து, - பல்விதமாம்

ஆசுமுதல் நால்கவியும், அட்டாவ தானமும், சீர்ப்
பேசும் இயல் பல்காப்பியத் தொகையும்,- ஓசை

எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும், தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து, - ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பில், இருவாதனை யகற்றி,
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத், - தம்மை விடுத்து,

ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்,- சேய

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு,
அடியேற்கு முன்னின்று அருள்!

கந்தர் கலிவெண்பா முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

1. நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

2. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாம் துணைப் போதும் மறவா தவர்க்கொரு தாழிவில்லையே

3. குமரா சரணம் சரணம் என்றண்டர் குழாம் துதிக்கும்
அமரா பதியிற் பெருமான் திருமுகம் ஆறுங்கண்ட
தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி என் செயுமே

4. மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோ டனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்திலனே அந்த நான்முகனே.

5. வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன் அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடக்குடுமிக்
காலா யுதக்கொடி யோன் அருளாய கவசம் உண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

6. குமரா சரணம்என் றண்டர் குழாம் துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுகம் ஆறுங்கண்ட
தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்டகடையேடு வந்தினி என் செயுமே.

7. கருமான் மருகனைச் செம்மான் மகளை களவு கொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானம் உய்யப்
பொருமா வினைச் செற்ற போர்வேல னைக் கன்னிப்பூகமுடன்
தருமா மருவுசெங்கோடனை வாழ்த்துகை சால நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற் றிய பின்னர்க் காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய்ய வாம்சத்திவாள் ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே.

9. படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர் தாள்
முடிக்கின் றிலைமுரு காஎன் கிலைமுசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கௌ விம்மி விம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்சம் ஏது நமக்கினி.

10. நீர்க்கு மழிக்கு நிகர்என்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கும் இடத்தந்த மின்போலும் என்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட என்னின்எங் கேனும் எழுந்திருப்பார்
வேற்கும் ரற்கன் பிலாதவர் ஞானம் மிகவுதன்றே.

11. சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடியார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேல் அயன் கைஎழுத்தே.

12. பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன் செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனம் ஏற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்
# திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத்தொடராலே
சஞ்சலம் துஞ்சித திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவோனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமானே.

# திருச்செந்தூர்

இயலிசையிலு சிதவஞ்சிக் கயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனதுள் அறியுமன்பைத் தருவாயே
மயில் தகர்லிடை யரந்தத் தினைகாவல்
வனசகுற மகளைவந்தித் தணைவோனே
கயிலைமலையனை செந்திற் பதிவாழ்வே
கரிமுகவன் இளைய கந்தப் பெருமாளே.

# பழனி

நாத விந்தக லாநீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம - வெகுகோடி

நாம சம்புக மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தமயூரா நமோநம - பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம - கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகாநமோநம அருள்தாராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதுலும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத

எழ்தலம்புகழ் காவேரி யால்விளை
சேநாழ மண்டல மீதேம நோகர
ராஜகெம்பீர நாடாளு நாயக வயலூரா

ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன் குடி வரிவான தேவர்கள் பெருமாளே.

* * *

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்

பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் ஸாமீ நமோநம அரிதான

வேத மந்திர ரூபா நமோ நம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம அழகான

மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்

பாத கஞ்செறி சூராதி மானவெ
கூர்மை கொண்டயி லாலேபொ ராடியே
பார அண்டர்கள் வானொடு சேர்தர அருள்வோனே

பாதி சந்திர னேசூடும் வேனியர்
சூலு சங்கர னார்கீத நாயகர்
பார திண்டியமேசேரு சோதியர் கயிலாயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதாமநோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டுவி றாலேசி ராடவே
கோம னம்பல சூழ்கோயில் மீறிய
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமானே.

அதலசேட னார்ஆட அகிலமேரு மீதாட
அபின காளிதான் ஆட அவளோடன்
அதிரவீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட
அருகு பூதவேதாளம் அவையாட
மதுரவாணி தான்ஆட மலரில் வேதனார் ஆட
மருவுவானு ளோர் ஆட மதியாட
வனஜமாமி யார்ஆட நெடியமாம னார்ஆட
மயிலும் ஆடி நீ ஆடி வரவேணும்
கதைவிடாத தோள்வீமன் எதர்கொள் வாளியால் நீடு
கருதலார் கள்மாசேனை பொடியாக
கதறுகாலி போய்மீன விஜயன்ஏறு தேர்மீது
கனகவேத கோடுதி அலைமோதும்
உததி மீதி லேசாயும் உலகமூடு சீர்பாத
உவணம் ஊர்தி மாமாயன் மருகோனே
உதயதாம மார்பான ப்ரபுட தேவமா ராஜன்
உளமும் ஆடவாழ் தேவர் பெருமாளே.

கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய திரிசூலன்
கறுவி யிறுகு கயிறோ டுயிர்கள்
கழிய முடுகி எழுகாலந்
திரியு நரியு மெரியு முரிமை
தெரிய விரவி யணுகாதே
செறிவு மறிவு முறவு மனைய
திகழு மடிகள் தரவேணும்
பரிய வரையி னரிவை மருவு
பரம ரருளு முருகோனே
பழன முழவர் கொழுவி லெழுது
பழைய பழநி யமர்வோனே
அரியு மயனும் வெருவ வருவ
அரிய கிரியை
அயிலு மயிலு மறமு நிறமும்
அழகு முடைய பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனமிக வேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசை பயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசௌ பாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழனிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தெதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாள்.

## சுவாமிமலை

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாய்
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூது மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குன்றுதோறாடல் (திருத்தணிகை)

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ குயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தருட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தனத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

## பழமுதிர்ச்சோலை

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமாட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமாரோனே
கடகபுய மீதிரந்த மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகமைசிவ ஞானமுத்தி பரகதியு நீ கொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதவத்ம மநுநிதமு மேதுமிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீராஅதிசயம
நேகமுற்ற பழநிமலைல மீதுதித்த
அழக திருவேரகத்தின் முருகோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டே[illegible] கோண்டாவில். T.P.- 021 222 6722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org